**தலைப்பு – 246 உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் 3.1.1, 3.1.2 மற்றும் 3.1.3 ஆகிய அட்டவணைகளில் உள்ளடக்கியுள்ள வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதாக 36 வருமானக் கணக்குகள் அரசிறை கொள்கை திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணுதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆந் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை

மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக 246 செலவு தலைப்பு தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.14 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை** | **அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர்** |
|---|---|---|---|
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும் | 1. செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2.1.1 |
| | | 2. பிரதான அலுவல்களை நிறைவேற்றுவதன் முன்னேற்றம் | 2.1.3 |
| | | 3. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை | 2.8(அ) |
| | | 4. ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை பேணாமை | 2.12 |
| | | 5. பெறுகை நடைமுறை செயற்படுத்துவதில் உள்ள குறைப்பாடுகள் | 2.2.2 |
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு | 1. பிரதான அலுவல்களை நிறைவேற்றுவதன் முன்னேற்றம் | 2.1.3 |

| | | | |
|---|---|---|---|
| | முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும், பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செய்திருத்தல் | 2. பெறுகை நடைமுறை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைப்பாடுகள் | 2.2.2 |
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை பேணுதல் | 2.12 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு அத்துடன் ஏனைய விடயங்கள் பற்றி போதிய உள்ளகக் கண்காணிப்பு பேணப்படுவதுடன், காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்படுகின்றதெனவும் | 1. வருமானக் கணக்குகளில் குறைப்பாடுகள் | 2.9 |
| | | 2. அரசாங்கத்தின் அலுவலர்களின் முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது, அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும். | 1. வருடாந்த பொருட் மீளாய்வுகளை மேற்கொள்வதில் உள்ள குறைப்பாடுகள் | 2.3 (இ) |
| | | 2. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைப்பாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு | 1. செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை | 2.1.1 |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் கேட்கப்படும் அத்தகைய தகவல், கூற்றுகள், விவர அறிக்கைகள் ஆகியன சரியாகவும், உடனடியாகவும் கொடுக்கப்படுகின்றனவெனவும். | 2. பெறுகை நடவடிக்கைகளை போதுமான அளவில் திட்டமிடாமை | 2.2.1 |
| | | 3. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை | 2.8(அ) |
| | | 4. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தாமதமாகி சமர்ப்பித்தல் | 2.1.2 |
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற வேண்டியவைகளை சேகரித்தல் தொடர்பான முன்னேற்றங்களை காட்டும் அறிக்கைகளை தினம்தோறும் பிரதான கணக்கீட்டு அலுவலரிடம் அனுப்பபடுகின்றதெனவும். | 1. வருமானக் கணக்குகள் தொடர்பாக | 2.9 |
| | | 2. அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு தொடர்பில் | 2.10 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவும், | 1. வருமானக் கணக்குகளின் குறைப்பாடுகள் | 2.9 |
| | | 2. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதியை அறவிடல் | 2.10 |
| | | 3. முறையற்ற கொடுக்கல்வாங்கல் | 2.4 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்களின் கொடுக்கல்வாங்கலில் எதிர்பார்க்கப்படும் சிக்கனம், திறமை, ஒழுக்கமுடமை, நேர்மை ஆகியவற்றிற்கு உரிய மதிப்புக் கொடுத்துத் தனது திணைக்கள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவெனவும், | பிரதான அலுவல்களை நிறைவேற்றுவதன் முன்னேற்றம் | 2.1.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும், (நி.ஒ.150 பார்க்கவும்) | ஒதுக்கீட்டு கணக்கில் குறைப்பாடுகள் | 2.8(இ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களது/ பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு, நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் / பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், (பொறுப்பு கூறும் பொருட்டு போதியளவிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் விசேடமாக அவரது கடமைப் பொறுப்பாகும்.) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.5 |

**நிதி ஒழுங்குவிதி 128(2) – அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை**

| | | | |
|---|---|---|---|
| 128(2)(அ) | அரசிறை தலைப்புக்கு ஏற்புடையதாக அரசிறை மதிப்பீடுகளை முற்றாகவும், இயன்றளவு செம்மையாகவும், தயாரிக்கப்படுகின்றன எனவும். | எதிர் பார்க்கப்பட்ட வருமானம் திரட்டுவதற்கு இயலாமை | 2.9 |
| 128(2)(ஆ) | ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் நிதி ஒழுங்குவிதி 151 பிரகாரம் வருமானக் கணக்குகளை தயாரித்தல் | வருமானக் கணக்கினை முறையாக தயாரிக்கப்பட்டிருக்காமை | 2.9 |
| 128(2)(இ) | அரசிறை தலைப்புகளுக்கு ஏற்புடையதாக நிதி ஆண்டின் யூன் 30 ஆந் தேதியன்றும் திசெம்பர் 31 ஆந் தேதியன்றும் உள்ளவாறான அரசிறை நிலுவைகளைக் காட்டும் அரையாண்டுத் திரட்டுகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் | அரையாண்டு நிலுவை வருமான அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்து கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.9 |

| | | | |
|---|---|---|---|
| | அதிபதிக்கு அனுப்பப்படுகின்ற தெனவும், (இந்தத் திரட்டுகள் முறையாக நிதி ஆண்டின் யூலை 31 அந் தேதிக்கும் சனவரி 31 ஆந் திகதிக்கும் முன்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும்.) பிரதிகளை அரசிறை நிதிக் கொள்கை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.) | | |
| 128(2)(எ) | சம்பந்தப்பட்ட பற்பல திணைக்களங்களிலிருந்து தேவைப்படும் தகவலைப் பெறுவதன்மூலம், அரசிறையின் பொருத்தமான தலைப்புகளின்கீழ் சேகரிக்கப்படுகின்ற தொகைகள் தொடர்பான பதிவுகள் பேணப்பட்டு அத்தகைய வருமான குறியீட்டின்கீழ் சேர்க்கப்படும் வருமானம் தொடர்பாக திறைசேரி வைத்துக்கொண்டுள்ள கணக்குகளுடன் குறித்த அறிக்கைகளின் குறிப்புகள் இணங்குகின்றதெனவும், | திறைசேரி கணினி அச்சீட்டில் எண்களை அடிப்படையாகக்கொண்டு வருமானக் கணக்கு தயாரித்திருத்தல் | 2.9 |
| 128(2)(ஐ) | வரிகள், கட்டணங்கள், முதலியவற்றின் வீதங்களையும். செலவுப் பணங்களையும் மீளப் பார்வையிடப்படுகின்றன எனவும், பொருளாதார நிலைகளிலும் பிற நிலைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனித்துத் தேவையான இடத்தில் காலத்துக்குக் காலம் அவற்றை மீள ஆராய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், | வருமானத்தின் ஏற்றத்தாழ்வு தொடர்பாக தாக்கங்கள் ஏற்படுத்திய விடயங்கள் பற்றி பகுப்பாய்வு மேற்கொள்ளாமை | 2.9 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

----------------------------------------------------------------------------------------------------------------------

### 2.1 செயலாற்றுகை

------------------------

#### 2.1.1 திட்டமிடல்

-----------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தின் பொருட்டு ஒதுக்கிக் கொண்ட ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்றிட்டத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகையால் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக வருடாந்த வரவு செலவு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் திட்டம், செயற்படுத்திய நேர அட்டவணை மற்றும் அந்தச் செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட விளைவளவு/ நலன்கள் தொடர்பான மதிப்பீடுகள் பற்றி பரிசோதனை செய்வதற்கு முடியவில்லை.

### 2.1.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், காலதாமதத்தின் பின்னர் அந்த அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.1.3 பிரதான அலுவல்களை நிறைவேற்றுவதன் முன்னேற்றம்

திணைக்களத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீளாய்விற்கான ஆண்டின் செயலாற்றுகைபடி பிரதான அலுவல்களை நிறைவேற்றும் முன்னேற்றத்திற்கான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

#### (அ) வரி அறிக்கைகள் வழங்குவதன் இணக்கப்பாடு

வருமான அறிக்கைகளை உரிய நேரத்திற்கு வழங்குதல் மற்றும் சுய வரி மதிப்பீடுகளின் அடிப்படையில் செலுத்தல்களை மேற்கொள்வதற்கு, வரி செலுத்துநர்களின் இணக்கப்பாட்டினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படினும், உரிய திகதியில் அறிக்கை சமர்ப்பிக்கும் முன்னேற்றம் 2014/2015 மதிப்பீட்டு ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| **மதிப்பீட்டு ஆண்டு** | **உரிய திகதியில் வரி அறிக்கைகளை சமர்ப்பிக்கும் முன்னேற்றம் (வரி வகையீடுகளின் படி)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **வருமான வரி (கூட்டிணைந்த)** | **வருமான வரி (கூட்டிணையாத)** | **உழைக்கும் போது செலுத்தும் வரி** | **நாட்டைக் கட்டியெழுப்பும் வரி** | **பெறுமதி சேர் வரி** |
| | % | % | % | % | % |
| 2014/2015 | 52 | 47 | 63 | | |
| 2015/2016 | 30 | 48 | 57 | | |
| 2016/2017 | 41 | 45 | 14 | | |
| 2015 | | | | 86 | 65 |
| 2016 | | | | 31 | 71 |
| 2017 | | | | 21 | 47 |

#### (ஆ) சுய வரி மதிப்பீட்டு அடிப்படையிலும் ஏனைய அடிப்படையிலும் வருமானம் சேகரிப்பு

மீளாய்விற்கான ஆண்டிலும், கடந்த இரண்டு ஆண்டுகளிலும், சுய வரி மதிப்பீட்டு அடிப்படையிலும், ஏனைய அடிப்படையிலும் வருமானம் சேகரிப்பின் முன்னேற்றம் பின்வருமாறாகும். (இறக்குமதி மீது, பெறுமதிசேர் வரி மீது மற்றும் இறக்குமதியின் மீது நாட்டைக் கட்டியெழுப்பும் வரி தவிர்ந்த)

| விபரம் | 2015<br>சுய வரி மதிப்பீடு மீது | <br>ஏனைய அடிப்படையில் | 2016<br>சுய வரி மதிப்பீடு மீது | <br>ஏனைய அடிப்படையில் | 2017<br>சுய வரி மதிப்பீடு மீது | <br>ஏனைய அடிப்படையில் |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் திரட்டுதல் (ரூபா.பில்லியன்) | 542.2 | 18.1 | 496.9 | 27.8 | 616.5 | 22.8 |
| முழுமொத்த வருமானத்தின் சதவீதமாக (இறக்குமதி மீது (VAT NBT தவிர்ந்த) – (%) | 97 | 3 | 94 | 6 | 96 | 4 |

அதனடிப்படையில் உத்தியோகபூர்வ மதிப்பீடுகளை வெளியிடும் அடிப்படையில் வருமானம் சேகரிப்பு (ஏனைய அடிப்படையின் மீது) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 5 பில்லியன் அல்லது 18% ஆல் குறைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.2 பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்**

திணைக்களத்தால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு ரூபா.121.9 மில்லியன் ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருந்ததுடன், அதில் ரூபா. 121.6 மில்லயின் ஒதுக்கீடுகளை மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.1 பெறுகை திட்டமிடல்**

திணைக்களத்தால் மீளாய்விற்கான ஆண்டில் பெறுகை நடைமுறையின் பொருட்டு உபயோகப்படுத்தியிருந்த ரூபா. 121.6 மில்லியன் ஒதுக்கீடுகள் தொடர்பில் பெறுகை திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பினும், பெறுகை நடவடிக்கைகளை காலத்திற்கேற்றவாறு மேற்கொள்வதற்காக பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறுகை நடைமுறை செயற்படுத்தல்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான வரி காலப்பகுதிக்கு ஏற்புடையதான வரி சேகரிப்பு மேற்கொள்கின்ற பிரதான கணினியின் தரவு முறைமை பராமரிப்பு சேவை உடன்படிக்கை 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 22 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தது. திணைக்களத்தால் இந்த முறைமை பராமரிப்பதற்காக வழங்குநரை தெரிவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், கணக்காய்வு பரிசோதனை மேற்கொண்ட 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பெறுகை நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டு, பொருத்தமான சேவை வழங்குநரை தெரிவு செய்துக்கொண்டு அதன் பராமரிப்பு பணிகளை கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த வரி சேகரிப்பு முறைமையில் ரூபா.323 பில்லியன் அளவிலான நிலுவை வரி மீதி நிலவுவதுடன், தரவு முறைமையில் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு காலத்திற்கேற்றவாறு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

**2.3 சொத்துக்களின் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி புதிய நகர திட்டத்தின்கீழ் இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் தாபிக்கப்படுவதற்காக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.5.13 மில்லியன் பெறுமதியிலான

41 பேர்ச் காணியினை 2007 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் திணைக்களத்திடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் உரிய காணியினை சுவிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக, 10 ஆண்டுகளிலான கால தாமதத்தின் பின்னர் 2017 ஆம் ஆண்டில் ரூபா.14.35 மில்லியன் தொகையில் புதிய மதிப்பீட்டு விலைக்கு சம்பந்தப்பட்ட காணியை கொள்வனவு செய்திருப்பதன்மூலம் ரூபா. 9.22 மில்லியன் தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும், காலத்திற்கேற்றவாறு காணி கொள்வனவு செய்து கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக பல ஆண்டுகளாக வாடகை கட்டிடமொன்றில் இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் பேணிச் செல்ல வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் மட்டும் குறித்த கட்டிடத்திற்கு வாடகையாக ரூபா.3.48 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தியுள்ள சில சொத்துக்கள் விளைவற்றிருந்ததாக மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| | **சொத்துக்களின் வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு காலம்** |
|---|---|---|---|
| (i) | ட்ரான்ஸ்போமர் இயந்திரங்கள் | 02 | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை (உள்நாட்டு இறைவரி கட்டிடம் நவீனமயப்படுத்தலின் போது வழங்கப்பட்டிருந்தது) |
| (ii) | சீ.சீ.ரீ.வீ.கெமராக்கல் | 70 | 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை (உள்நாட்டு இறைவரி கட்டிடத்தின் நவீனமயப்படுத்தலின்போது மாடிகளுக்கு பொருத்தியிருந்தபோதும் அவற்றை பயன்படுத்தப்படவில்லை.) |

**(இ) வருடாந்த பொருட் மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்**

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்ட பொருட் மீளாய்வு அறிக்கைகளின்படி, திணைக்களத்தின் 16 கிளைகளுக்கு ஏற்புடையதாக 53 பொருட் வகைகளின் பொருட்டு 230 அலகுகளில் மிகை உள்ளதாக அடையாளம் காணப்பட்டிருந்தது. மேலும் 04 கிளைகளில் 19 பொருட் வகைகளின் பொருட்டு 84 அலகுகளில் பற்றாக்குறையும், சிற்றுண்டிச்சாலையில் 09 பொருட் வகைகளின் பொருட்டு 621 அலகுகளில் பற்றாக்குறையும் அடையாளம் காணப்பட்டிருந்தது. ஆயினும் அந்த மிகை மற்றும் குறைப்பாடுகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 757(2) பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டதற்கான சான்றுகள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்

திணைக்களத்தால் மேற்கொண்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) 2006 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் 17(அ) மற்றும் 34(ண) பிரிவு பிரகாரம் புதிய தொழில்முயற்சியின் பொருட்டு நிலையான சொத்துக்களுக்கு ரூபா 50 மில்லியனுக்கு குறையாத முதலீடு மேற்கொண்டுள்ளவிடத்து, அந்த முதலீட்டு தொகையில் 25 சதவீதம் தகைமை பெறுகின்ற கொடுப்பனவாக வரி கணக்கிடுகையில் குறைப்பதற்கான வாய்ப்பு இருந்தது. உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு பொருள்கோடல் வழங்கும் குழுவால் சட்டத்தின் 17(அ) பிரிவிற்கு வழங்கியுள்ள பொருள்கோடலின்படி தற்போதுள்ள வியாபாரமொன்றில் புதிய தொழில்முயற்சியின் பொருட்டு இந்த நலன்களை வழங்கும்போது பல விடயங்களை பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்திக் கொண்டவாறு மூன்று வரி செலுத்துநர்களால் திருத்தம் செய்யப்பட்ட வரி அறிக்கைகளை சமர்ப்பித்து, வரிக்கு உட்பட்ட வருமானத்தை கணக்கிடுகையில் மொத்தம் ரூபா.2,953.9 மில்லியன் தொகையினை தகைமை பெறுகின்ற கொடுப்பனவாக கழிப்பதற்கு கோரியிருந்ததுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் பின்வருமாறு ரூபா.1,687.7 மில்லியன் தொகை தகைமை பெறுகின்ற கொடுப்பனவாக செலுத்துவதற்கு இடமளித்திருந்தது.

| **வரி கடிதக் கோவை இலக்கம்** | **மதிப்பீட்டு ஆண்டு** | **தகைமை பெறுகின்ற கொடுப்பனவாக கழிப்பதற்கு குத்தகைகாரரால் கோரியுள்ள தொகை ரூபா** | **தகைமை பெறுகின்ற கொடுப்பனவாக கழிப்பதற்கு திணைக்களத்தால் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ள தொகை ரூபா** |
|---|---|---|---|
| 114007560 | 2012/2013 | 557,644,816 | 323,197,103 |
| | 2013/2014 | 1,021,211,334 | 599,205,818 |
| 114011096 | 2012/2013 | | |
| | 2013/2014 | 436,894,556 | 260,949,038 |
| 114037443 | 2012/2013 | | |
| | 2013/2014 | 938,181,921 | 504,398,905 |
| மொத்தம் | | 2,953,932,627 | 1,687,750,864 |

(ii) மேற்படி வரி செலுத்துநர்களிடம் இந்த நிதிசார் நலன்களை வழங்குகையில் பொருள்கோடல் குழு சுட்டிக் காட்டியுள்ள எல்லா விடயங்களையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கடிதக் கோவைபடி உறுதிப்படுத்தியிருக்கவில்லை. மேலும் வரி செலுத்துநர் கோரியுள்ள தொகையில் ஒரு பகுதியை மட்டும் தகைமை பெறுகின்ற தொகையாக கழிப்பதற்கு, வாய்ப்பு வழங்கியிருந்த அளவினை தீர்மானிக்கும் அடிப்படையும் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(ஆ) செலவினத்தின் முகாமைத்துவம் தொடர்பாக மென்மைதங்கிய சனாதிபதியால் வெளியிடப்பட்டிருந்த 2006 ஆம் ஆண்டு சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்டீ/81/40 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அதற்கு அவ்வப்போது திருத்தங்கள்

மேற்கொண்ட சுற்றுநிருபங்களுக்கு கவனம் செலுத்தப்படுவதுடன், சனாதிபதி செயலகம் வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டு பெப்ருவரி 28 ஆந் திகதிய கடிதத்தில் 111 ஆவது பந்திமூலம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் தமது கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை நடாத்துவதற்கு ஹொட்டல்களை தெரிவு செய்தலாகாது. மேலும் உள்நாட்டு சுற்றுலாக்களின்போது உணவு பானங்கள், தங்குமிடங்களின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ஹோட்டல் கட்டணங்கள் அரசாங்க தொகையில் தீர்க்கப்படுதலாகாது. ஆயினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் மீளாய்விற்கான ஆண்டிலும் கடந்த 3 ஆண்டுகளிலும் ஹோட்டல்களில் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துவதற்கு ரூபா 23,088,032 பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

---------------------------------------------------

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது வெளிப்படுத்திக் கொண்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் அலுவலர்களால் 2012 ஆம் ஆண்டில் 114388149 ஆம் இலக்க மற்றும் 114614254 ஆம் இலக்க வரிக் கடிதக் கோவைகள் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட புலனாய்வு முறையாக மேற்கொள்ளப்படவில்லையெனவும், வரி செலுத்துநரால் பல வங்கி கணக்குகளின் தகவல்களை வரி அறிக்கைகளில் வெளிப்படுத்தவில்லையெனவும், பொதுமக்கள் பிரதிநிதித்துவம் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பிரதிநிதித்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வங்கி கணக்குகளுக்கு ஏற்புடையதாக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் அண்டு வரையிலான வங்கி கூற்றுகள் தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின்போது, மொத்தம் ரூபா.3,179 மில்லியன் தொகை வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்த தொகையில் வரி செலுத்துநரின் வருமானம் தொடர்பாக அடையாளம் காணப்பட்டு, அதன்மீது வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரிக்கான மேலதிக மதிப்பீடுகளை வழங்குவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொண்டதாக அவதானிக்கப்படவில்லை.

(ஆ) ஏற்காத காசோலைகள் பொருட்டு பணம் அறவிடுகையில் உதாசீனமாக நடந்து கொண்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக இவ்வாறு ஏற்காத காசேலலைகளின் எண்ணிக்கை 6,842 ஆகியதுடன், அவற்றின் பெறுமதி ரூபா.1,986 6,842 மில்லியன் ஆகியது. அவ்வாறு ஏற்காத காசோலைகளுக்கிடையில் மூன்றாம் தரப்பிடமிருந்து சேகரித்துக்கொண்டு திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளாத பணத் தொகைக்கான காசோலைகளின் எண்ணிக்கை 3,791 ஆகியதுடன், அதன் பெறுமதி ரூபா1,509 மில்லியன் ஆகியது. அது மொத்தமாக ஏற்காத காசோலை பெறுமதியில் 76 சதவீதமாகும். ஏற்காத மொத்த காசோலைகளின் எண்ணிக்கையில் 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 25 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.1,711 மில்லியன் தொகைக்கு ஏற்புடையதான 5,888 காசோலைகள் அறவிடப்படவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க முத்திரை கட்டணம்(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புகளின்படி மதுபான விற்பனை மற்றும் போத்தலிடப்பட்ட கள்ளு விற்பனை தொடர்பான ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில்முயற்சி மேற்கொள்கையில் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம்மீது 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் ரூபா.10,000 ம், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் ரூபா. 20,000 படி முத்திரைக் கட்டணம் பிரதேச செயலகங்கள்மூலம் அறிவிடப்படுதல் வேண்டுமென அறிவிக்கப்பட்ருந்தது. அந்த முத்திரைக் கட்டணங்களிலிருந்து விடுவிப்பதற்காக நிதி அமைச்சர் அவர்களால் முத்திரைக் கட்டணங்களை விடுவிக்கும் கட்டளைகளை

தயாரித்து அதிவிசேட வர்த்தமானிஊடாக வெளியிடப்படுதல் வேண்டும். ஆயினும், அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை பிரகாரம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் ஒருவரால் வெளியிடப்பட்டிருந்த சுற்று நிருபம் மூலம் 04 மதுபான வகைகளின் பொருட்டு அனுமதிப்பத்திரங்கள் மற்றும் போத்தலிடப்பட்ட கள்ளு விற்பனை அனுமதிப் பத்திரங்களுகள் என்பவற்றுக்கு முத்திரை கட்டணங்கள் அறவிடாதிருப்பதற்கு பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டு காலப் பகுதிக்குள் பாரிய அளவிலான முத்திரைக் கட்டண வருமானம் அரச வருமானத்திற்கு கிடைக்காது போயிருந்ததுடன், மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் 19 பிரதேச செயலகங்களால் வழங்கியிருந்த மேற்படி அனுமதிப் பத்திரங்களுக்கு 2017 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா 2.7 மில்லியன் தொகை முத்திரைக் கட்டண வருமானம் கிடைக்காமல் போயிருந்தது.

## 2.6 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

உள்நாட்டு இறைவரிக் கட்டிடம் நவீனமயப்படுத்தல் மற்றும் 9 மாடிகளைக் கொண்ட வாகன தரிப்படம் நிருமாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 1.437 மில்லியன் ஆவதுடன், ரூபா.1,318 மில்லியன் தொகை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அந்த நிருமாணிப்புகள் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது, 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் அந்த நிருமாணிப்புகள் முடிவுறுத்தப்படாமை 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் 3.7 பந்திமூலம் சுட்டிக்காட்டியிருப்பினும், 2018 ஆம் ஆண்டு யூன் 30 அந் திகதியிலும் நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவில்லை.

## 2.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வரி நிருவாக நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு ரூபா. 4 பில்லியனுக்கு அதிகமான பணத் தொகை செலவிடப்பட்டு இறைவரி சேகரிப்பு முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) தாபித்து, 2016 ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு உள்நாட்டு வருமானத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. அதற்கு ஏற்புடையதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி மீதான சட்டம், 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம், வரி செலுத்துநர்களால் 2017 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த பெறுமதி சேர் வரி, வருமான வரி, உழைக்கும்போது செலுத்தும் வரி, மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பாக 312,507 வரி அறிக்கைகள் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லையென வரி சேகரிக்கும் முறைமையின் தகவல்படி உறுதியாகியது.

(ii) வரி சேகரிப்பு முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இன்கீழ் நிருவகிக்கப்படும் வரி வகைகளின் பொருட்டு வரி செலுத்துநர்கள் சமர்ப்பிக்கும் தகவல்களும் அறிக்கைகளும் தொடர்பில் அந்த முறைமையினுள் அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள் மற்றும் மேலும் பரிசோதனை செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பில், வேலை விடய முறைமையால் அலுவலரிடம் அனுப்பி வைக்கப்படுகிறது. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டில் அவ்வாறு அலுவலர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த வேலை விடயங்கள் 346,645 அதாவது, மொத்த வேலை

விடயங்களில் 34% ஐ மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் உரியவாறு முடிவுறுத்தப்படவில்லை. முடிவுறுத்தப்படாத வேலை விடயங்களுக்கிடையில் 144,337 பெறுமதி சேர் வரிக்கு ஏற்புடையதானதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வேலை விடயங்களை முடிவுறுத்தாமை காரணமாக கணினி முறைமையின் நடவடிக்கைகளும் காலத்திற்கேற்றவாறு நடைபெறுவதில்லையென அவதானிக்கப்பட்டது.

(iii) வரி அறிக்கைகள் கிடைக்கப்பெறுதல், வரி அறிக்கைகள் தொடர்பில் உத்தியோகத்தர் நடைமுறைப்பட்டுள்ள முறை மற்றும் உத்தியோகத்தர்களிடம் முன்வைக்கப்படும் அலுவல்களை முடிவுறுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் மெற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்பன பற்றி நுண்ணியதாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முழுமொத்த தரவு முறைமையை அணுகும் வசதி 2018 ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரையும் கணக்காய்வாளர் அதிபதியிடம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1982 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை சட்டத்தில் 15(1) பிரிவுபடி சாதன பத்திரம்மூலம் ஏதேனும் சொத்தொன்றை சமர்ப்பனம் செய்கின்றவிடத்து சொத்தின் சந்தை பெறுமதிபடி அறவிடப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை கணக்கிடுதல் வேண்டும். ஆயினும் சட்டத்தில் ஏற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு குத்தகை உறுதி மற்றும் ஈட்டு முறி தொடர்பில் பெறுமதிகளை கவனத்தில் கொள்கையில் சந்தை பெறுமதியை அடிப்படையாகக் கொள்ளாத சந்தர்ப்பங்களும் மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க முத்திரை தீர்வைக் சட்டத்தில் 38(1) பிரிவு பிரகாரம் மதிப்பீட்டாளர் ஒருவரிடம் கொண்டு வரப்படும் சாதன பத்திரம் பொருட்டு அறவிடப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை தொடர்பாக மதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்கு, சானத பத்திரம் கொண்டு வரும் நபரால் ரூபா.250.00 கட்டணம் செலுத்தப்பட வேண்டியபோதும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வு திகதி வரையும் இந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக 13 உத்தியோகத்தர்களால் பேணிச் சென்ற குத்தகை உறுதி மற்றும் ஈட்டு முறி பதிவு ஆவணங்களில் 10,336 சாதன பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய கட்டணம் ரூபா. 2,584,000 என்று அவதானிக்கப்பட்டது.

(இ) பெறுமதி சேர் வரி மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பில் வரி செலுத்துநர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரி அறிக்கைகள்மீது பணம் செலுத்தியிராத சந்தர்ப்பங்களில், கணினி முறைமை சார்ந்து தன்னியக்கமாக மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கி, நிலுவை வரி அறிவித்தல் மற்றும் அபராதப் பணம் கணக்கிடப்பட்டு பதிவு செய்யும் முறைமை 2012 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் அந்த முறைமை நிறுத்தப்படுதல் காரணமாக அன்றைய திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் வரி செலுத்துநர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி சேர் வரிக்கும், நாட்டைக் கட்டியெழுப்பும் வரிக்கும் ஏற்புடையதான அறிக்கைகள் மீதான வரி தொகையின் மொத்தம் ரூபா. 15,283 மில்லியன் செலுத்தப்படாதிருந்தது. மேலும், அதற்கு ஏற்புடையதான மதிப்பீட்டு அறிக்கைகளும் வழங்கப்படாமை காரணமாக நிலுவை வரித் தொகை மற்றும் அதன்மீது கணக்கிடப்பட்ட ரூபா.9,238 மில்லியன் அபராதப் பணமும் என்ற வகையில் மொத்தம் ரூபா. 24,521 மில்லியன் தொகையிலான நிலுவை மீதி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் திணைக்களத்தால் அறவிடப்படவில்லை. அதே போன்று அவற்றை நிலுவை வரியாக பதிவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி மீது அறவிடப்படும் வரி எல்லை அதிகரிக்கப்பட்டதுடன், 17,000 இற்கு அதிக எண்ணிக்கையிலான வரி செலுத்துநர்களை உரிய வரி தொகுதியல் உள்ளடங்காதவர்களாக அகற்றுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. அதேபோன்று குறித்த வரி கடிதக் கோவைகளை தற்காலிகமாக செயற்படாத கோவைகளாக்கப்பட்டன. ஆயினும் குறித்த வரி செலுத்துநர்களின் பதிவுகளை இரத்துச் செய்து, அப்போது அவர்களிடம் வழங்கப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி பதிவுச் சான்றிதழ்களை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயத்தால் மீண்டும் அழைப்பித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மீளாய்விற்கான ஆண்டிலும் கடந்த பல ஆண்டுகளாகவும், மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின்போது, அவ்வாறு செயற்படாத 77 கோவைகளுக்குரிய வரி செலுத்துநர்களால் பெறுமதி சேர் வரி பொருட்டு பதிவு செய்திருப்பதாக குறிப்பிடப்பட்டு, அரச நிறுவனங்களில் ரூபா 63.6 மில்லியன் அளவிலான தொகை பெறுமதி சேர் வரியாக சேகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆயினும், அந்தப் பணத் தொகை திணைக்களத்திடம் அனுப்பியிருக்கவில்லை. மேலும், சில வரி செலுத்துநர்களால் அரச நிறுவனங்களில் சேகரிக்கப்படும் பெறுமதி சேர் வரி மீதான வரித் தொகையை அறிக்கைகளில் வெளிப்படுத்தாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய பின்னர் சம்பந்தப்பட்ட வரி செலுத்துநர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு திணைக்களத்தால் ஓரளவிற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் செயற்படாத கோவைகள் உள்ள வரி செலுத்துநர்கள், அரச நிறுவனங்களில் பெறுமதி சேர் வரி சேகரித்தலை தவிர்ப்பதற்கும் அரச நிறுவனங்களால் செலுத்தப்படும் பெறுமதி சேர் வரிமீதான வரித் தொகையினை வரி செலுத்துநர்களால் உரியவாறு வரி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் முறைமை புதிய இறைவரி நிருவாக கணினி முறைமையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரி சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டமாக மேற்கொள்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பணியாற்றியிருப்பினும், அதற்கு ஏற்புடையதாக ரூபா 23,000,000 ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்து கொள்ளுதலும், பணிற்றொகுதியை ஆட்சேர்ப்புச் செய்து சேவையில் ஈடுபடுத்தலும் மீளாய்விற்கான ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 16 ஆந் திகதிய 01.∴2016(1) ஆம் இலக்க சுற்றுநிருபத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் கருத்திட்டத்திற்காக அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் ஊதியம் தீர்மானிப்பதற்கு சம்பந்தப்பட்ட கருத்திட்டம் பொருட்டு அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆயினும் இந்த கருத்திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் இந்த அங்கீகரிக்கப்படாத கருத்திட்டத்திற்கு பணியாற்றொகுதியின் பொருட்டு 40 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. கருத்திட்டத்தில் ஏனைய செலவுகளுக்காக மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.12,289,621 தொகை செலவிடப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் சட்டத்தில் 210 (1) ஆம் பிரிவு பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஊக்குவிக்கும் நிதியம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், சட்டத்தில் 210 (1) பிரிவு பிரகாரம் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம்படி உத்தியோகத்தர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளும் ஊக்குவிப்பு நடவடிக்கைகனும் நிதியத்தின் பணிகளாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வருடாந்தம் ஒதுக்கப்படும் தொகை, சட்டத்தில் 210 (2) பிரிவு பிரகாரம், நிதியத்திடம் செலுத்தல் வேண்டும். ஆயினும் ஊக்குவிப்பு படி செலுத்தல்

நிதியத்தின்மூலம் மேற்கொள்ளப்படவில்லை. ஒதுக்கீட்டுச் சட்டத்தில் வருடாந்தம் வழங்கப்படும் பணத் தொகையினை நிதியத்தில் வரவு வைக்காது பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அதனூடாக செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் அவ்வாறு செலுத்தியுள்ள தொகை ரூபா 641,728,651 ஆகும். மேலும் சட்டத்தில் 210 (4) பிரிவு பிரகாரம் நிதியத்தின் நிருவாகம் பொருட்டு நடைமுறை விதிக்கோவை தயாரிப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(எ) பாரிய அளவிலான வரி செலுத்துபவர்களின் பிரிவில் இருந்த 114018830 ஆம் இலக்க வரி கடிதக் கோவைக்கு ஏற்புடையதாக கணக்காய்வு உசாவுதல்களை வழங்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 அந் திகதியிலும் 2007/2008 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் 2014/2015 மதிப்பீட்டு ஆண்டு வரையிலான வரி காலப்பகுதியின் பொருட்டு விபரமான கணக்காய்வு மேற்கொண்டிருக்கவில்லை. கணக்காய்வு உசாவுதல்களை வழங்கிய் பின்னர் 2014/2015 மதிப்பீட்டு ஆண்டுக்காக மட்டும் வரி தொடர்பான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி வரி கடிதக்கோவைக்கு ஏற்புடையதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011/2012 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் 2014/2015 மதிப்பீட்டு ஆண்டு வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகள் 05 இற்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருமான வரி அறிக்கைகள், பெறுமதி சேர் வரி மீதான அறிக்கைகள், நாட்டைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்களின் வரி அறிக்கைகள் என்பவற்றில் ஒவ்வொன்றுக்கு வேறுப்பட்ட புரள்வுகளை காட்டியிருப்பினும், திணைக்களத்தால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு சரியான புரள்வை அடிப்படையாகக்கொண்டு வரிசெலுத்தல் தொடர்பாக சரியாக கணக்கிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்காய்வு உசாவுதல் வழங்கிய பின்னர் வரி கடிதக் கோவையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2014/2015 மதிப்பீட்டு ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிகளுக்கு தகவல்களை கோருவதன்மூலம் வரிசெலுத்துநர் சிரமங்களுக்கு உள்ளாவார் என அறிவித்து 2014/2015 மதிப்பீட்டு ஆண்டுக்கு மட்டும் கணக்காய்வு நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. மேலும் பெறுமதி சேர் வரி மீதான அறிக்கைகளை பூரணப் படுத்துகையில் வரிசெலத்துநரால் முறையாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென திணைக்களம் வெளிப்படுத்திக் கொண்டிருந்த போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தாது வரிசெலுத்துநர் வழங்கிய முழுமைப்பெறாத தகவல்களை அடிப்படையாகக்கொண்டு கணக்காய்வு மேற்கொண்டு ரூபா.23,213,338 மேலதிக வரிக்காக வரிசெலுத்துநரை இணங்கச் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) கண்டி பிராந்திய அலுவலகத்தில் வரி கடிதக்கோவை இலக்கம் 86/9002-03 தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வரி கடிதக்கோவைபடி, வரி செலுத்துநரின் பிரதான வருமான வளமூலம் பந்தயம் கட்டும் வியாபார வருமானமாவதுடன், இந்த வியாபாரத்தை 40 ஆண்டு காலம் வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் 2012/2013 மதிப்பீட்டு ஆண்டில் வியாபார வருமானம் ரூபா 375 மில்லியனாகவும், 2014/2015 மதிப்பீட்டு ஆண்டில் மேற்கொண்டிருந்த விபரமான கணக்காய்வில் வியாபார வருமானம் ரூபா. 5,104 மில்லியனாகவும் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், 2007/2008 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் 2011/2012

மதிப்பீட்டு ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வருமானம் 15-25 மில்லியன் தொகைக்கு இடையிலான எல்லைக்குள் வியாபார வருமானமாக வரி செலுத்துநரால் காட்டப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதிமீது வருமான வரி கணக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, வரி செலுத்துநரின் சரியான வியாபார வருமானத்தை வெளிப்படுத்திக்கொள்ளாமையால் கடந்த ஆண்டுகளில் பாரிய அளவிலான வரி வருமானம் கிடைக்கப்பெறவிலலை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) பந்தயம் மற்றும் சூதாட்டச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சூதாட்ட வியாபாரத்தை பேணிச் செல்கின்ற ஒரு கிளையில் 2014/2015 ஓராண்டுக்கு ரூபா .300,000 ம் மற்றும் 2015/2016 மதிப்பீட்டு ஆண்டுக்கு ரூபா.600,000 ம், என்ற வகையிலான கட்டணம் அறவிடுதல் வேண்டும். வரி கடிதக்கோவையை கணக்காய்வு செய்த உத்தியோகத்தர்களுக்கு அமைவாக, இந்த வியாபாரத்தில் 175 கிளை அலுவலகங்கள் இருப்பதாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பினும், 2014/2015 ஆண்டில் 100 கிளைகளுக்கும் 2015/2016 ஆண்டில் 120 கிளைகளுக்கும் மட்டும் வருடாந்த கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மொத்தம் ரூபா.55.5 மில்லியன் வரி வருமானம் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

(iii) பந்தய மற்றும் சூதாட்ட சட்டத்தின்படி, நேரடி வசதிகளுடன்கூடிய பந்தயம் கட்டும் சூதாட்ட வியாபாரத்தின் கிளையொன்றில் மாதாந்த மொத்த கிடைக்கப்பெறுபவைகளில் 5% விகிதாசாரத்திலான வரி அறவிடுதல் வேண்டும். ஆயினும் வெளிப்படுத்திக் கொண்டுள்ள ரூபா.5,104 மில்லியன் வியாபார வருமானத்திற்கு ஏற்புடைய மொத்தக் கிடைக்கப்பெறுபவைகளை கிளைகளின்படி பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கிளைகளிலும் மொத்தமாக கிடைக்கப்பெறும் தொகையினை கணக்கிடப்பட்டு, பந்தயம் மற்றும் சூதாட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மொத்த கிடைக்கப்பெறுதலின்மீது சரியான வரி அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(iv) வரி செலுத்துநர் 2010 ஆம் ஆண்டில் மரணமடைந்திருந்ததுடன், வரிசெலுத்துநரின் கையொப்பமின்றி வேறு நபரால் வரி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், அது தொடர்பாக வெளிப்படுத்திக்கொள்வதற்கு கடிதக்கோவைக்கு பொறுப்பான உத்தியோகத்தர் தவறியிருந்தார். 2014/2015 மதிப்பீட்டு ஆண்டில் மேற்கொண்ட விபரமான கணக்காய்வின் பின்னரும் மேலதிக வரி மற்றும் அபராதம் உள்ளடக்கிய ரூபா. 2,995 மில்லியன் தொகையிலான மதிப்பீட்டு அறிவிப்பை மரணமடைந்த வரி செலுத்துநரின் வரி கடிதக் கோவை இலக்கத்தின்கீழ், வரி கடிதக் கோவை தொடர்பாக முனைப்பாக செயலாற்றிய மரணமடைந்த வரி செலுத்துநரின் மரபுரிமையாளரிடம் வழங்குவதற்கு உத்தியோகத்தர்கள் பணியாற்றியிருந்தனர். மதிப்பீட்டுக்கு எதிர்பு தெரிவித்து மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் அது தீர்க்கப்படவில்லை.

**2.8 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்**

---

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான 05 ஆண்டு காலப் பகுதிக்குள் திணைக்களத்திடம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகள், உபயோகம்,

மற்றும் மீதி தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மீதி | தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 1,687.18 | 1,683.27 | 3.91 | 0.23 |
| | மூலதன | 244.00 | 192.62 | 51.38 | 21.06 |
| | **மொத்தம்** | **1,931.18** | **1,875.89** | **55.29** | **2.86** |
| 2014 | மீண்டுவரும் | 2,010.32 | 2,002.41 | 7.91 | 0.39 |
| | மூலதன | 1,137.68 | 1,085.55 | 52.12 | 4.58 |
| | **மொத்தம்** | **3,148.00** | **3,087.96** | **60.03** | **1.91** |
| 2015 | மீண்டுவரும் | 2,440.00 | 2,428.41 | 11.59 | 0.47 |
| | மூலதன | 2,036.05 | 2,008.72 | 27.33 | 1.34 |
| | **மொத்தம்** | **4,476.05** | **4,437.13** | **38.92** | **0.87** |
| 2016 | மீண்டுவரும் | 2,879.20 | 2,841.16 | 38.04 | 1.32 |
| | மூலதன | 1,686.05 | 1,219.97 | 466.08 | 27.64 |
| | **மொத்தம்** | **4,565.25** | **4,061.13** | **504.12** | **11.04** |
| 2017 | மீண்டுவரும் | 3,025.43 | 3,014.61 | 10.82 | 0.36 |
| | மூலதன | 1,439.08 | 1,322.56 | 116.52 | 8.10 |
| | **மொத்தம்** | **4,464.51** | **4,337.17** | **127.34** | **2.85** |

**இது தொடர்பிக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) வரவு செலவு மதிப்பீடுகளை தயாரித்தல்**

நி.ஒ.விதி 50 (ii) இன் ஆலோசனைகள்படி மதிப்பீடுகளை இயன்றவரை சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் மீளாய்விற்கான ஆண்டுக்கான மொத்த செலவு மதிப்பீடு ரூபா. 3,218 மில்லியன் ஆயினும், பின்னராக அனுமதித்துக்கொண்டுள்ள ரூபா.1,098 மில்லியன் ஆன குறைநிரப்பு ஒதுக்கீடுகள் காரணமாக தேறிய ஒதுக்கீடு ரூபா.4,316 மில்லியன் வரை 34% ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும் , 11 செலவு வியடங்களின் பொருட்டு அடிப்படை மதிப்பீடுகளுடன்கூடிய ஒதுக்கீடு 10% தொடக்கம் 1030 வரையிலான எல்லைக்குள் அதிகரிக்கப்பட்டிருந்ததால் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதேச ரீதியாக வரி சேகரிப்பினை வலுவூட்டும் நோக்கத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் புதிய 12 பிராந்திய செயலகங்களை தாபிப்பதற்கு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 20 மில்லியன் வருடாந்த வரவு செலவுதிட்டம்மூலம் ஒதுக்கீடு செய்து கொள்ளப்பட்டிருந்தது. புதிய பிரதேச செயலகங்களை தாபிப்பதற்கு நிதி மற்றும் தொடர்பாடல் அமைச்சினால் அனுமதி கிடைக்கப்பெறாமை காரணமாக புதிய பிராந்திய செயலகங்களை தாபிப்பதற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கைகள் மீளாய்விற்கான ஆண்டில் மேற்கொண்டிருக்கவில்லை.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தின் நவீனமயப்படுத்தலுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா.52 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகையில் ரூபா.21.3 எஞ்சியிருந்தது. கடந்த இரண்டு ஆண்டுக்குள் மேற்படி செலவு விடயத்தின் ஒதுக்கீடுகளின் மிகுதி ஒழுங்குமுறையாக 35% ம் 55 % ம் ஆகியது. அதன்படி பிராந்திய அலுவலகங்களை நவீனமயப்படுத்தலின் உபயோகத்திற்காக முறையான திட்டம் இல்லாமை அவதானிக்கப்பட்டது.

**2.9 மதிப்பிடப்பபட்ட மற்றும் உண்மையான வருமானம்**

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டுக்காக வருமானக் குறியீடு 36 இற்கான மொத்தம் ரூபா.837,855 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் ரூபா. 792,351 மில்லியன் வருமானம் திரட்டப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 94மூ ஆக காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் | | | உண்மையான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உண்மையான வருமானம் | விஞ்சுதல்/ (பற்றாக்குறை) | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 10.02.01.01 | 55,000 | 50,053 | (4947.00) | 91.01 |
| 10.02.01.02 | 155,000 | 149,447 | (5553.00) | 96.42 |
| 10.02.01.03 | 75,000 | 75,846 | 846.00 | 101.13 |
| 10.02.01.04 | 165,000 | 168,393 | 3393.00 | 102.06 |
| 10.02.02.01 | 0 | 0.04 | 0.04 | - |
| 10.02.02.02 | 0 | 0.08 | 0.08 | - |
| 10.02.02.03 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.02.03.01 | 0 | 16 | 16.00 | - |
| 10.02.03.02 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.02.03.03 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.02.07.00 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.02.08.00 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.02.09.00 | 0 | 21 | 21.00 | - |
| 10.02.10.00 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.02.12.01 | 40,000 | 38,821 | (1179.00) | 97.05 |
| 10.02.12.02 | 15,000 | 10,894 | (4106.00) | 72.63 |
| 10.02.12.03 | 20,000 | 19,320 | (680.00) | 96.60 |
| 10.03.03.00 | 1,800 | 1,929 | 129.00 | 107.17 |
| 10.03.04.00 | 1,500 | 1,334 | (166.00) | 88.93 |
| 10.03.05.00 | 45 | 53 | 8.00 | 117.78 |
| 10.03.07.10 | 1,500 | 1,651 | 151.00 | 110.07 |
| 10.03.07.11 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.03.07.12 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.03.09.00 | 0 | 7 | 7.00 | - |
| 10.03.10.00 | 10 | 4 | (6.00) | 40.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.04.01.01 | 122,000 | 107,614 | (14386.00) | 88.21 |
| 10.04.01.02 | 18,000 | 17,074 | (926.00) | 94.86 |
| 10.04.01.03 | 7,000 | 8,185 | 1185.00 | 116.93 |
| 10.04.01.04 | 0 | 0 | 0.00 | 0.00 |
| 10.04.02.01 | 35,000 | 32,920 | (2080.00) | 94.06 |
| 10.04.02.99 | 15,000 | 10,716 | (4284.00) | 71.44 |
| 10.04.03.01 | 60,000 | 51,351 | (8649.00) | 85.59 |
| 10.04.03.99 | 3,000 | 1,983 | (1017.00) | 66.10 |
| 10.04.04.01 | 47,000 | 42,560 | (4440.00) | 90.55 |
| 10.04.04.02 | 1,000 | 2,159 | 1159.00 | 215.90 |
| 20.06.03.00 | 0 | 0 | 0.00 | 0.00 |
| | ----------- | ------------ | ---------- | --------- |
| மொத்தம் | 837,855 | 792,351 | (45,503.8) | 94.56 |
| | ======= | ====== | ===== | ===== |

மேற்படி கணக்கு தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் மீளாய்விற்கான ஆண்டின் அடிப்படை வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய வருமான மதிப்பீடு என்பவற்றில் உள்ளடக்குவதற்காக ஒழுங்கு முறையாக ரூபா.632,240 மில்லியன் மற்றும் ரூபா.784,828 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதிகளின்மீது அரச நிதிக் கொள்கை திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருப்பினும், அரச நிதிக் கொள்கை திணைக்களத்தால் அடிப்படை வருமான மதிப்பீடு ரூபா.798,268 மில்லியன் ரூபாவாகவும், திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபா. 837,855 மில்லியனாகவும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வழங்கிய மதிப்பீட்டு பெறுமதிகளின் மாற்றங்களுக்கு காரணமாகிய விடயங்கள் மற்றும் அவ்விடயங்களின் தாக்கங்களின் அளவினை கணக்காய்விடம் சமர்ப்பிக்கும்படி அரசிறை நிதிக் கொள்கை திணைக்களத்திடம் கோரிய போதும், அது தொடர்பாக போதியளவிலான விளக்கமளித்தல் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 அந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கையில் 03 ஆம் பந்திபடி அடிப்படை வருமானங்களை தயாரிக்கும்போது வருமானம் கணக்கிடும் அடிப்படைக்கு ஏற்புடையதான தகவல்களை விபரமாக காட்டப்பட வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் வருமானம் மதிப்பிடப்படும் அடிப்படைக்கு ஏற்புடையதான தகவல்கள் திணைக்களத்தால் விபரமாக குறிப்பிடப்படவில்லை.

(இ) கணக்காய்வாளர் அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பழைய வரி சேகரிப்பு முறைமைக்கும் (Legacy System) புதிய வரி சேகரிப்பு முறைமைக்கும் ஏற்புடையதாக (RAMIS) நிலுலை வரி திரட்டுகளின்படி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சேர்க்கப்பட வேண்டிய நிலுவை வருமானங்களின் மொத்தம் ரூபா. 341,537 மில்லியன் ஆகியது. ஆயினும் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்குகள் 36 இல் டீ.ஜீ.எஸ்.ஏ வருமானம் - 2 படிவங்களில் உப இலக்கங்கள் 8 தொடக்கம் 14 வரை நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரி சேர்த்தல் பழைய வரி சேகரிப்பு முறைமை (Legacy System) மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வரி திரட்டுகளின்படி 2017

ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வரி மற்றும் அபராதப் பணம் ரூபா. 323,732 மில்லியன் ஆகியது. ஆயினும், 2012 ஆம் ஆண்டு திசெமப்ர் 31 ஆந் திகதியில் திணைக்களத்தின் மொத்த வருமானம் ரூபா. 192,663 மில்லியன் ஆகியதுடன், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் நிலுவை வரி வருமானம் 68% ஆல் வளர்ச்சியடைந்திருந்தது. நிலுவை வரி அறவிடல் அல்லது சீராக்கி கொள்வதற்கு மீளாய்விற்கான ஆண்டு மற்றும் கடந்த ஆண்டுகளில் போதியளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக மேலும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்படி நிலுவை வரி மற்றும் அபராதப் பணத்தில் ரூபா.32,070 மில்லியன் அதாவது மொத்த நிலுவையில் 10% அளவில் அறவிடுவதற்கு முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. மீதி ரூபா. 291,662 மில்லியன் அதாவது 90% நிலுவை வரி மற்றும் அபராதப் பணம் அறவிடல் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டது. மாதிரி பரிசோதனைபடி, எதிர்புகளை காட்டுதல், கணினி முறைமைகளின் வழுக்கல் மற்றும் வேறு காரணங்களாக குறிப்பிடப்பட்டு அறவிடல்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள தொகையின் மொத்தம் ரூபா. 58,236 மில்லியன் ஆன நிலுவை வரியாக மீதியினை தீர்ப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) இரத்துச் செய்யப்பட்ட வரிச் சட்டங்கள் 06 இற்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டு ஆரம்பத்தில் ரூபா. 7,529 மில்லியன் நிலுவை இருந்ததுடன், அந்த நிலுவை வரியில் ரூபா 6,718 மில்லியன் தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருட்கள் மற்றும் சேவைகள்மீதான வரிச் சட்டம் 2002 ஆம் ஆண்டில் இல்லாதொழிக்கப்பட்டிருப்பினும், அந்தச் சட்டத்தின்கீழ் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,949 மில்லியன் தொகையிலான பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரித் தொகை 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் திணைக்களத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நிலுவை வரி மீதிக்கு ஏற்புடையதான காலப் பகுப்பாய்வொன்றை கணக்காய்வில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், அந்த நிலுவை மீதி தொடர்பான விபரங்கள் பதிவில் இருக்கவில்லை.

(உ) 2015/2016 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் வரி சேகரிப்பு, புதிய வரி சேகரிப்பு முறைமை (RAMIS) இன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு ஏற்புடையதாக நிதி ஒழுங்குவிதி 128(2)(இ) பிரகாரம் 2018 ஆம் ஆண்டு சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலுவை வருமான அறிக்கை கால தாமதமின்றி 2018 ஆம் ஆண்டு யூலை 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக அறவிடப்படாதிருந்த நிலுவை வரி மற்றும் அபராத பணத் தொகை ரூபா. 17,805 மில்லியன் ஆகியது.

(ஊ) 1002-01-00 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி மீதான வரி கட்டுப்பாட்டு கணக்கில் திறைசேரியில் காட்டப்பட்டுள்ள வருமானத்திலும் பார்க்க திணைக்களத்து திரட்டுகளின்படி வருமானம் ரூபா.101,153,974 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது. அந்த வேறுபாடுக்கு ஏற்புடையதான காரணங்களை அடையாளம் காணப்பட்டு சரியாக சீராக்காது திணைக்களத்தின் புத்தகங்களில் பெறுமதி சேர் வரி மீது (ஏனைய சேவைகள்) வருமான குறியீட்டுக்கு வரவு வைக்கப்பட்டு திறைசேரியின் பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்டு வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுமதி சேர் வரி வருமானத்தின் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(எ) கூட்டிணைப்பு அல்லாத வரி (ஏனைய வருமானம்) குறியீட்டில் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி அறிக்கைகள்படி ரூபா 474,088,314 ஆன இணக்கமின்மை நிலவியதுடன், அதற்கு ஏற்புடையதான காரணங்களை அடையாளம் காணப்பட்டு செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது, வருமானத்தில் மீண்டும் செலுத்தலாக மாற்றல் பத்திரங்கள் மூலம் திறைசேரி கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. இந்த வருமான குறியீடு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மேலும் 20 வருமான குறியீடுகளில் திறைசேரியின் கட்டுப்பாட்டு கணக்காகவும், நடைமுறைப்படுவதால், அந்த எல்லா வருமானம் குறியீடுகளுக்கும் ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் வருமானத்தில் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஏ) வருமானம் சேகரிக்கும் வங்கி கணக்குகள்மூலம் திறைசேரியிடம் வரவு வைக்கப்படும் வருமானத் தொகை மற்றும் திணைக்களத்தில் பேணிச் சென்ற திரட்டுகளின்படி வருமானத்தின் செவ்வைத் தன்மை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் வரை மட்டும் ஒப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதன்படி ஒப்பீடுகளை மேற்கொண்டு வருமானத்தின் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்தாது வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆந் திகதிய 2015 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க நிதிச் சட்டம்மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டிருந்த கெசினோ கைத்தொழிலின் வருமான வரி மற்றும் புலம்பெயர் வரிக்கு எற்புடையதான வரி வருமானம் திரட்டுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) சட்டத்தின் ஏற்பாடுகளின்படி 2015 ஆம் ஆண்டு நவம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் ஒரு நிறுவனத்திடமிருந்து 1,000 ம் மில்லியன் படி கெசினோ வியாபாரங்கள் 04 இன் மொத்தம் ரூபா. 4000 ம் மில்லியன் கெசினோ கைத்தொழில் வருமான வரி திரட்டப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அதில் ரூபா.785 மில்லியன் மட்டும் திரட்டப்பட்டிருந்தது. அதன்படி, மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா.3,215 மில்லியன் தொகை மீளாய்விற்கான ஆண்டில் நிலுவை வரியாகவும் பதிவாகியிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் வலுவிலிருக்கும் வகையில் நிரந்தரமாக நாட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொரு இலங்கை பிரசைகளிடமிருந்தும், அந்த பிரசை நாட்டிலிருந்து வெளியில் கொண்டுச் செல்வதற்காக விடுவிக்கப்படும் அந்நியச் செலாவணி மீது 20% ஆன புலம்பெயர் வரி அறவிடும் ஏற்பாடுகளை விதிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்விற்கான ஆண்டில் புலம்பெயர் வரியாக ரூபா.4.1 மில்லியன் மட்டும் திரட்டப்பட்டிருந்தது. ஆயினும் குடிவரவு குடியகழ்வு திணைக்களத்துடன் இணைந்து நிரந்தரமாக நாட்டைவிட்டுச் செல்கின்ற நபர்களை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களால் நாட்டை விட்டு வெளியில் கொண்டுச் செல்கினற அந்நியச் செலாவணியை தீர்மானத்து வரி தொகுதிக்குள் அடங்குவதை அதிகரித்துக்கொள்ளும் பொறிமுறை மற்றும் முறைமை தாயரிப்பதன்மீது திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஓ) 2017 ஆம் அண்டு வரவு செலவு திட்டம்படி நிதிசார் கொடுக்கல்வாங்கல்மீது வரி விதிப்பதற்கான பிரேரணையில் அடிப்படை வருமானமாக ரூபா 8,000 மில்லியன் மற்றும் முதலீட்டு சொத்துக்கள் கிடைக்கப்பெறும் இலாபம்மீது, மூலதன இலாபம் வரிமூலம் ரூபா.5,000 ம் மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும் மீளாய்விற்கான ஆண்டில் இந்த வரி செயற்படாமை காரணமாக வருமானம் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2016 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டம்படி மிகை கட்டண வரி என்ற பெயரில் கூட்டிணைந்த வரியின்கீழ் புதிய வரி விதிக்கப்பட்டிருப்பினும், சம்பந்தப்பட்ட சட்டத்துடனான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் இந்த வரி நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஔ) சுங்கத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் வரி வருமானத்தில் ரூபா.9,460.9 மில்லியன் தொகை மாகாண சபையிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அனுப்பி வைத்திருந்த தொகையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் சுங்கத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு ஏற்புடையதான அறிக்கைகள் சுங்கத் திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்கு ஏற்படையதான விடய இலக்கம் 24601 இன்கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| செலவு | | கிடைக்கப்பெறுதல் | | பற்று மீது | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உண்யைமான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான | ஆகக்கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா .மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூாப.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 110.00 | 64.8 | 77.00 | 91.01 | 415.00 | 322.2 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிலுவை கடன்மீதி அறவிடப்படாமை

கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்க கூற்றுபடி அன்றைய திகதியில் அறவிடல் நிலுவையாக இருந்த மீதிகளில் மொத்தமானது, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோத்தர்களின் கடன் மீதி தவிர்ந்த ரூபா. 804,108 ஆனதுடன், அந்த நிலுவை மீதி ஓராண்டு தொடக்கம் 20 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி தொடக்கம் இருந்து வந்தாலும், அந்த நிலுவை மீதி அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இடம் மாற்றம் பெற்றுவந்த உத்தியோகத்தர்களிடம் ரூபா.567,400 ஆன இடர் கடன் மீதி திணைக்களத்தால் கையேற்கப்படாதிருந்ததுடன், உத்தியோகத்தரின் மாதாந்த சம்பளத்தில் அறவிடப்பட்ட ரூபா.11,290 ஆன கடன் தவணை தொகை, கடன் வழங்கியிருந்த ஊவா மாகாண சபையிடம் அனுப்பி வைத்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி 30/2008 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை பிரகாரம் வழங்க முடியுமான இடர் கடன் தொகையின் ஆகக்கூடிய எல்லை ரூபா.250,000 ஆயினும் உத்தியோகத்தர்களால் முன்னர் சேவையாற்றிய இடத்திலிருந்து அந்த எல்லையை கடந்து இடர் தொகை பெற்றுக்கொண்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**2.11 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின்கீழ் உள்ள பொது வைப்புக் கணக்குகள் 06 இல் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதிகளின் மொத்தம் ரூபா.1,937.37 மில்லியன் ஆகியது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் வழங்குநர்களிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள ரூபா.21.5 மில்லியன் தொகை சம்பந்தப்பட்ட தரப்பிடம் விடுவித்தல் அல்லது நிறுத்தி வைத்தல் எதிர் பார்க்கப்பட்ட பணிகளின் பொருட்டு உபயோகப்படுத்தாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வழங்குநர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா.2.3 மில்லியன் ஆன தாமதக் கட்டணங்கள் நிதி ஒழுங்குவிதி 572 பிரகாரம் அரச வருமானத்திற்கு வரவு வைக்காது பொது வைப்பிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.12 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

திணைக்களத்தால் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் பேணிச் செல்கின்ற நிலையான சொத்துக்களின் பதிவேடு 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை/நிதி ஒழுங்குவிதி 502(2) பிரகாரம் மற்றும் அதில் 11 ஆவது பின்னிணைப்பு பிரகாரம் எல்லா விபரங்களும் உள்ளடக்கி இற்றைப்படுத்தி பேணி இருக்க வில்லை.

**2.13 மனிதவள முகாமைத்துவம்**

**இணைக்கப்பட்ட பணியாற்தொகுதி, உண்மையான பணியாற்தொகுதி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள்**

திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான வெற்றிட மற்றும் மேலதிக பணியாற்தொகுதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டுக்காக திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டு ரூபா.2,103 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டான செலவு ரூபா.833,227 ஆகும்.

| பணியாற் தொகுதியின் வகுதி | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 1,248 | 1,177 | 71 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 36 | 27 | 9 | - |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 1,055 | 904 | 151 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 437 | 414 | 23 | - |
| (v) | அமைய /ஒப்பந்தம் | - | 2 | - | 2 |
| | மொத்தம் | 2,776 | 2,524 | 254 | 2 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 254 ஆகியதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் தொகுதியில் 9% ஆகும். அதில் உள்நாட்டு இறைவரி சேவையில் அலுவலர்களின் வெற்றிட

எண்ணிக்கை 71 ஆகியதுடன், உதவி பணியாற்தொகுதியின் வெற்றிடங்கள் 183 ஆகியது. புதிய வருமான வரி சேகரிப்பு கணினி முறைமையின்கீழ், வரி சேகரிப்புக்கு ஏற்புடைய முறைமைமூலம் வேலை விடயங்கள் உள்நாட்டு இறைவரி சேவையில் உத்தியோகத்தர்களிடம் முன்வைக்கப்படுகிறது. உதவி பணியாற்தொகுதியில் அலுவலர்களின் உதவியுடன் உள்நாட்டு இறைவரி சேவையின் உத்தியோகத்தர்களால் அந்த வேலை விடயங்களை முடிவுறுத்தி வரி செலுத்தல் இணக்கப்பாட்டினை பேணிச் செல்லுதலும் கடிதக் கோவைகளின் கணக்காய்வும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவுதல் வேலை உருப்படிகளை காலத்திற்கேற்றவாறு முடிவுறுத்தலின்மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்படுவதுடன், கணக்காய்விடம் சமர்ப்பித்த தகவல்களுக்கமைவாக, மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முறைமையினுள் ஏற்படுத்திய வேலை விடயங்கள் 346,645 ஐ 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் முடிவுறுத்தப்படவில்லை.

(ஆ) கணக்காய்விடம் சமர்ப்பித்த பணியாற்தொகுதி விபரங்களின்படி (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில்) உண்மையான பணியாற்தொகுதி 02 ஆகியதுடன், இதற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி இருக்கவில்லை. கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட IAQ/2017/46(1)/10 இலக்க மற்றும் 2017/10/31 ஆந் திகதிய கடிதம்படி அவர்கள் இருவருக்கும் நிரந்தர நியமனங்கள் அளிப்பதை கவனத்தில் கொள்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பினும், இதுவரை அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்படி மீளாய்விற்கான ஆண்டில் உள்நாட்டு இறைவரி சேவையில் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையான 1162 இல் 727 உத்தியோகத்தர்கள் அதாவது, 63% பிரதான அலுவலகத்தின் பிரிவுகளிடம் இணைக்கப்பட்டிருந்ததுடன், 435 உத்தியோகத்தர்கள் அதாவது 37% பிராந்திய அலுவலகங்களில் இணைக்கப்பட்டிருந்தனர். ஆயினும், மொத்த வருமானத்தில் 95% ஐ பிரதான அலுவலகத்தில் பிரிவிடம் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களால் திரட்டியிருந்ததுடன், பிராந்திய அலுவலகங்களில் 5% அளவிலான வருமானம் திரட்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி பணியாற்தொகுதியை இணைக்கும் முரண்பாடு அவதானிக்கப்பட்டது.

## 2.14 நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்கியொழுகுதல்

நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 3030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக ஒவ்வொரு அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் விடயவெல்லைக்கு உட்படும் பணிகள் தொடர்பில் எவ்வாறு செய்றபட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.